பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 25 | சனிக்கிழமை | 11.11.2023 | கதிர் 365

# யாழ். நதி நீர்த் திட்டம் குறித்து கலந்துரையாடல்

## பிரதமர் நேற்று அறிவிப்பு

யாழ். நதிநீர்த் திட்டம் சம்பந்தமாக தொடர்புடைய தரப்புக்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.நதி நீர்த் திட்டம் சம்பந்த மாக கலந்துரையாடல்கள் தொடங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் மூலமாக வடக்கு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வினை எட்ட முடியும் என்று நான் கருதுகின்றேன்;. அத்துடன், தற்போதுள்ள நற்பதாயிரம் ஏரிகளை மேம்படுத்துவதற்கும் திட்டமிடப் ☞ 2

# இது ரகசியம் அல்ல!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியைச் சந்தித்ததைத் தொடர்ந்து இலங்கைக் கிரிக்கெட் சபை தொடர்பில எழுந்துள்ள சர்ச்சைகளால் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) வெள்ளிக்கிழமை கூடி, இலங்கை கிரிக்கெட் சபையை தடை செய்துள்ளது.

நாடுகளின் கிரிக்கெட் சபைகள் தன்னாட்சி உடையவையாக இருக்கவேண்டும், அவற்றின் நிர்வாக ஒழுங்குமுறைகளில் ஆட்சிகளின் தலையீடு இருக்கக்கூடாது என்பன போன்ற ஐசிசியின் நிபந்தனைகள் இலங்கையில் தற்போது மீறப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே ஐசிசி இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த இடைக்காலத் தடைமீதான நிபந்தனைகள் ஐசிசியால் தீர்மானிக்கப்படும். நவம்பர் 21 ஐசிசியின் ஆளுநர் குழு மீண்டும் கூடும்போது இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

உலகக் கிண்ணப் போட்டித் தோல்விகளைத் தொடர்ந்து இலங்கையின் விளையாட்டு அமைச்சர் திங்களன்று இலங்கைக் கிரிக்கெட் சபையை பதவியிலிருந்து நீக்கிவிட்டு, உலகக்கோப்பை வென்ற அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இடைக்காலக் குழுவை ☞ 2

# தமிழ் பாடசாலைகளுக்கு திங்கட்கிழமை விடுமுறை

தீபாவளியை முன்னிட்டு நவம்பர் 13 திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவம்பர் 13 முஸ்லிம் பாடசாலைகள் தவிர்ந்த அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படுகிறது. இதற்கான மாற்றீடாக நவம்பர் 18 சனிக்கிழமை அதே ☞ 2

# நவம்பர் 13இன் பின்னர் போராட்டம் தீவிரமாகும்

## அரச சேவை தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவிப்பு

நவம்பர் 13இன் பின்னர் போராட்டங்கள் தீவிரப்படுத்தப்படுமென அரச சேவை தொழிற்சங்க கூட்டமைப்பின் இணைப்பாளர் தம்மிக்க முனசிங்க அறிவித்தார்.

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று அரச சேவை தொழிற்சங்க கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் ஒன்று கூடி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

தமக்கு 20 ஆயிரம் ரூபா சம்பள ☞ 8

# 150 மில்லியன் டொலர் உதவி உலக வங்கியிடமிருந்து கிட்டும்

இலங்கையின் நிதித்துறையை வலுப்படுத்துவதற்காக 150 மில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மாலைத்தீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் பாரிஸ் ஹட்டட் சேர்வோஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு வலுவான நிதி பாதுகாப்பு வலையமைப்பின் அவசியத்தை தற்போதைய பொருளாதார நெருக்கடியானது எடுத்துக் காட்டுகிறது.

இதற்காக பொருளாதாரம், வர்த்தகம், தனிநபர்கள், சிறு வணிகங்கள் மற்றும் ஏழை குடும்பங்களுக்கு நிலையான மற்றும் நம்பகமான வங்கிக் கட்டமைப்பு மிகவும் அவசியமாகும்.

நிலையான காப்புறுதித் திட்டத்தை வலுப்படுத்துவதன் ஊடாக பின்தங்கிய கிராமப்புறங்களில் வசிப்போர் மற்றும் பெண்கள் உள்ளிட்ட சிறிய அளவான வைப்பாளர்களின் ☞ 8

# அரச மருத்துவ அதிகாரிகள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்



அரச மருத்துவ அதிகாரிகள் ☞ 8

# அரச நிறுவனங்களின் இலாபங்கள் கையளிப்பு

ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சிற்குரிய 5 நிறுவனங்களின் வருடாந்த இலாபமாக, 925 மில்லியன் ரூபாவை திறைசேரிக்கு வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதன்படி, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண ☞ 2

# பருவ மழையின் அடுத்த கட்டம் திங்கள் முதல்

இந்த ஆண்டுக்கான வடகீழ் பருவமழையின் முதல் சுற்று இன்றுடன் முடிவுக்கு வருவதோடு நேற்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் ☞ 8

# பிராந்தியத்திலும் ஐரோப்பாவிலும் உறவுகளைப் பலப்படுத்த முயற்சி

பொருளாதார ஒத்துழைப்புக்காக

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இந்தியா மற்றும் பிராந்திய பரந்த பொருளாதார சங்க நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துவதிலும் ஐரோப் பிய ஒன்றியத்துடனான உறவுகளை பலப்படுத்துவதிலும் இலங்கை கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ☞ 2

# சபாநாயகர் - சஜித் இருவரும் நேற்று நேருக்குநேர் தர்க்கம்

## இலங்கை கிரிக்கெட் சபைத் தீர்மானம் குறித்து

சாபாநயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு இடையிலும் நேற்று நாடாளுமன்றத்தில் நேருக்கு நேராக தர்க்கம் ஏற்பட்டது.

நாடாளுமன்றம் காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் கூடியது. கேள்வி நேரத்தின் பின்னர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சாபாநாயகர் எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீறிவிட்டார் என்று குற்றஞ்சாட்டினார்.

குறிப்பாக, இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகத்தினை நீக்கும் பிரேரணை மீது வாக்கெடுப்பினை எதிர்க்கட்சியினர் கோரிய போதும் அதனை நிராகரித்து ஏகமனதாக ☞ 2

# கிரிக்கெட் சபையை கலைக்கும் இறுதி முடிவு நீதிமன்றத்திடமே

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழுவினை கலைப்பதற்கான தீர்மானத்தினை எடுக்க வேண்டியது நீதிமன்றமே என்று நீதி அமைச்சர் கலாநிதி. விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகக் குழுவினை கலைப்பதற்கான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 8

# தோல்விக்கான காரணத்தை 2 நாள்களில் சொல்கின்றேன்

## கிரிக்கெட் தெரிவுக் குழுத் தலைவர் தெரிவிப்பு

இரண்டு நாட்களில் அனைத்தையும் வெளிப்படுத்துவதாக இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவின் தலைவர் பிரமோதய விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டியின் லீக் சுற்றில் தோல்வியடைந்த இலங்கைக் கிரிக்கெட் அணி நேற்றுக் காலை நாடு திரும்பிய நிலையில் கட்டு நாயக்கவில் ☞ 8

# யாழ். செயலக வாயிலை மூடி மீனவர்கள் நேற்று மறியல்



இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்துமீறலைக் கட்டுப்படுத்தக்கோரி யாழ். மாவட்டச் செயலகத்தின் வாயிலை மூடி மீனவர்கள் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். காலை 1-0 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. .

யாழ். மாவட்ட செயலக வாயிலில் ஒன்றுகூடிய கடற்தொழிலாளர்கள் செயலகத்தின் பிரதான வாயில் கதவை மூடி ☞ 2

# வீதியை உழுது நெல் விதைத்து மக்கள் நூதனமான போராட்டம்



வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட யாழ்.- மானிப்பாய் - காரைநகர் வீதியைச் சீரமைபத்துத் தருமாறு கோரிக்கை விடுத்து மூளாயில் மக்கள் நேற்று நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீதியில் ☞ 2

## இனி இது .....

நியமித்தார். அந்த இடைக்கால நிர்வாக சபையில் இரண்டு அரசியல்வாதிகளின் மகன்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

அமைச்சரின் இந்த முடிவுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடிய இலங்கைக் கிரிக்கெட் சபை, கலைப்புக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றது. இருப்பினும் சபையைக் கலைக்கவேண்டும் என்ற தீர்மானம் நாடாளுமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. இவற்றை அடுத்தே ஐசிசி இலங்கையின் உறுப்புரிமையை நிறுத்தி வைத்துள்ளது.

இந்தத் தடை உத்தரவு நடைமுறையில் இருக்கும்வரை இலங்கை எந்தவொரு சர்வதேசப் போட்டியிலும் விளையாட முடியாது. ஐசிசியின் முடிவு எதிர்பார்க்கப்படாத ஒன்றல்ல. இ-ருப்பினும் இலங்கைக் கிரிக்கெட்டில் அரசியல் தலையீடுகள் மேலும் தீவிரமடையுமாயின் 2024 ஜனவரியில் நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டிகள் பாதிக்கப்படும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## யாழ். நதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

மழைநீர் சேகரிப்பு, கடலுடன் கலக்கும் நதிநீரைச் சேகரிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பிலும் நடவடிக்கைகள்

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.

## பிராந்தியத்திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற பண்டாரநாயக்க சர்வ தேச கற்கை நிலையத்தின் வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு, சர்வதேச உறவுகள் தொடர்பான சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள், உயர் டிப்ளோமா படிப்புகள் மற்றும் பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் ஆகிய நிலைகளில் கற்கைகளை முடித்த 390 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், 2020, 2021, 2022, 2023 ஆகிய கல்வி ஆண்டுகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் மானியமும் வழங்கப்பட்டது.

இலங்கையின் சர்வதேச உறவுகள் தொடர்பில் சிறப்பான பங்களிப்பு வழங்கியதைப் பாராட்டி, மறைந்த ஜயந்த தனபால மற்றும் எச். எம். ஜி. எஸ். பளிஹக்கார ஜனாதிபதி விசேட கௌரவிப்புகளை வழங்கியதுடன், இந்த விருதை மறைந்த ஜயந்த தனபாலவின் சார்பில் அவரது மகன் சிவங்க தனபால பெற்றுக்கொண்டார்.

கடன் நெருக்கடி, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் தாமதம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட கொவிட் தொற்றுநோய்க்குபிந்தைய காலத்தில் எதிர்கொண்ட சவால்கள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது கருத்துத் தெரிவித்தார்.

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான போட்டி மற்றும் உலகளாவிய புவிசார் அரசியலில் அதன் தாக்கத்திலிருந்து எழும் சிக்கலான தன்மையையும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தற்போதைய நிலைமையை 'உலகளாவிய பலதரப்பு நெருக்கடியின் புவிசார் அரசியல்' என்று அழைத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கொவிட் 19 தொற்றுநோய், கடன் நெருக்கடி, காலநிலை மாற்றம், வர்த்தக பிரச்சினைகள் மற்றும் பிராந்திய மோதல்கள் அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சவால்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையின் அணுகுமுறை இந்து-பசுபிக் பிராந்தியம் தொடர்பான ஆசியான் அமைப்பின் நோக்குடன் சமநிலைப்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த சமுத்திரங்கள் ஒவ்வொன்றும் இரண்டு பெரும் சமுத்திரங்களாக தனித்தனி அடையாளங்களைக் கொண்டிருப்பதாகவும் வலியுறுத்தினார்.

ஆசிய-பசுபிக் கருத்தாக்கத்தை சீனா விரும்புவதாகவும், ஒரே மண்டலம் மற்றும் பாதை எண்ணக்கருவின் மூலம், பசுபிக் சமுத்திரத்தையும் இந்து சமுத்திரத்தையும் இணைத்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த அனைத்து சூழ்நிலைகளிலும் கூட, பெரும் அதிகாரப் போட்டி இல்லாத இடமாக இந்து சமுத்திரத்தைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

ஆபிரிக்க பிராந்தியத்தில் குறைந்த வருமானம் பெறும் நாடுகளுக்கான கடன் நிவாரணத்திற்காக இலங்கை முன் நிற்கும் என்று தெரிவித்த ஜனாதிபதி, காலநிலை மாற்றத்தை குறைப்பதற்காக வெப்பமண்டல பிராந்தியத்திலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த விடயங்கள் தொடர்பில் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்திக்கொள்ளும் ஒத்துழைப்பின் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய வர்த்தக முறையைப் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்படுவதற்கு முன்னர் நாடுகளுக்கு இடையில் ஒருமித்த கருத்துத் தேவை என்றும் வலியுறுத்தினார்.

காஸாவில் நடைபெற்று வரும் போர் குறித்து கவலை தெரிவித்த ஜனாதிபதி, ஹமாஸ் அமைப்பின் தலைமைத்துவத்தை அழிப்பதன் மூலம் மாத்திரம் மோதலை முடிவுக்குக் கொண்டு வர முடியாது என்றும், மேலும் அது தீவிரமடைவதைத் தடுக்க உடனடி போர் நிறுத்தம் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

சான்பிரான்சிஸ்கோவில் நடைபெறவுள்ள எபெக் உச்சிமாநாட்டின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் சீன ஜனாதிபதி ஷி ஜிங் பிங் ஆகியோருக்கு இடையில் நடைபெறவிருக்கும் சந்திப்பின் ஊடாக தற்போதைய நிலைமையைத் தணிக்க சாதகமான முடிவு கிடைக்கும் எனநம்புவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த உலகளாவிய சிக்கல்களைக் கடந்து செல்வதற்கு கூட்டு முயற்சி அவசியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் வலியுறுத்தினார்.

## வீதியை உழுது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்காங்கே வெள்ளம் தேங்கி நிற்கும் பெரும் பள்ளங்களில் ஏர் பூட்டியும் மற்றும் உழவியந்திரங்களைக் கொண்டும் வயல் உழுவது போன்று பாசாங்கு செய்து நெல் விதைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் முன்பள்ளி மற்றும் பாடசாலை மாணவர்களும் மூளாய், பொன்னாலை பிரதேச மக்கள் பலரும் பங்குபற்றினர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ரணில் ஆட்சியே எங்கள் மீது ஏன் இந்தப் பாரபட்சம், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளே உங்களுக்கு கண் இல்லையா?, வழக்கம்பரை தொடக்கம் பொன்னாலை வரை வாழும் மக்கள் மந்தைகளா?, வெள்ளத்தில் நீந்தியா நாம் பள்ளிக்கு வருவது போன்ற பல பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

## யாழ். செயலக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறியலில் ஈடுபட்டனர். அத்துமீறும் இந்தியப் படகுகளைத் தொடர்ந்து கைது செய்யவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்திய இழுவைமடி தொழிலால் தமது வாழ்வாதாரம் பாதிக்கபடுகிறது என்றும் தொடர்ந்தும் இவர்களது அத்து மிறல்களால் தொடர்சியான பாதிப்புகளைச் சந்திக்கும் தமக்கு ஒரு தீர்வும் தரப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் போது, இந்திய மீனவர்களே எமது கடல் வளங்களை அழிக்காதே, கடற்படையே அத்துமீறிய இந்தியா மீனவர்களை கைது செய் கடற்தொழில் அமைச்சரே ஜனாதிபதியே எமது கோரிக்கைகளை நிறைவேற்று என்று குரல் எழுப்பினர்.

போராட்டத்தின் முடிவில் மீன்பிடித்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட செயலருக்கான மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. யாழ் மாவட்ட மேலதிக செயலர், மருதலிங்கம் பிரதீபனிடம் மனுவின் பிரதிகள் கையளிக்கப்பட்டன.

''அத்துமீறி இலங்கை கடற்பரப்பினுள் நுழைகின்ற இந்தியச் கடற்றொழிலாளர்கள் இலங்கை கடல் பரப்பில் சட்ட விரோதமான இழுவைமடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை தாங்கள் அறிந்ததே.

இதன் காரணமாக. வடக்கு மாகாணம் கடற்றொழிலாளர்களாகிய எங்களின் வாழ்வாதாரமும் எமது கடல் வளங்களும் அழிக்கப்படுகின்றன. தொடர்ச்சியாக, எங்களது கடல் பரப்பில் நுழைகின்ற நூற்றுக்கணக்கான இந்த ட்ரோலர்களால் மீன் உற்பத்திக்கு ஏதுவான பவளப் பாறைகள் அழிக்கப்படுகின்றன.

இதனால் எதிர்காலத்தில் எமது கடற்பரப்பில் கடலுணவுகள் அழிந்து போகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளோம். இதனால் மக்களுக்கு தேவையான புரதச்சத்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலை உருவாகிவருகின்றது.

இந்த நிலை தொடருமானால் கற்றொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்த்துவருகின்ற வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள். எதிர்காலத்தில் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும்.

இது தொடர்பாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கு அமைவாக கடற்றொழில்' திணைக்களத்தினர் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதிலும், கடற்படையினரும் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கின்றனர். அவை போதுமான விளைவை ஏற்படுத்தவில்லை என்பதே தமிழ் பேசும் கடற்றொழிலாளர்களாகிய எமது ஆதங்கமாகம்.

நாங்கள் எதிர்கொள்ளும் அவலங்களை தமிழக மக்களுக்கும், தமிழக தலைவர்களுக்கும் எடுத்துரைத்து, இந்த விவகாரம் தொடர்பான உண்மைமையும், புரிதலையும் அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் - என்றுள்ளது.

## அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகார சபையிடம் இருந்து 350 மில்லியன் ரூபா, லங்கா போஸ்பேட் நிறுவனம் 300 மில்லியன் ரூபா, பி.சி.சி. நிறுவனம் 100 மில்லியன் ரூபா, தேசிய உப்பு நிறுவனம் 100 மில்லியன் ரூபா, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் 75 மில்லியன் ரூபா ஆக, வருடாந்த இலாபத் தொகையாக 925 மில்லியன் ரூபா திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சபாநாயகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணை நிறைவேறுவதாக அறிவித்தமையானது நிலையியற் கட்டளைகளுக்கு முரணானது என்று சுட்டிக்காட்டினார்.

அச்சமயத்தில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, நான் மூன்று தடவைகள் மிகத்தெளிவாக கோரியதன் பின்னரே பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றினேன். ஆரம்பத்திலிருந்தே முழு சபையும் ஏகோபித்தே பிரேரணையை ஆதரித்தது. ஆகவே நான் தவறு செய்யவில்லை. நீங்கள் சபையை பிழையாக வழிநடத்த வேண்டாம் என்றார்.

குறுக்கீடு செய்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நீங்கள் தவறு இழைத்துள்ளீர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஜனநாயகத்தையும், சிறப்புரிமைகளையும் மீறியுள்ளீர்கள். உங்களை இவ்வாறு நடந்து கொள்ளுமாறு கூறியது யார். தொலைபேசி அழைப்பில் யாராவது அறிவுறுத்தினார்களா என்று கேள்விகளை தொடுத்தவாறு இருந்தார்.

அதற்கு, நீங்கள் அவ்வாறு நினைத்தால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. நான் நியாயமாக நடந்துகொண்டேன். ஏகமனதாகவே பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்று கூறி அடுத்தகட்ட செயற்பாடுகளை ஆரம்பிப்பதாக அறிவித்தார் சபாநாயகர்.

இதேவேளை, விளையாட்டு சம்மேளங்களின் அதிகாரிகள் விளையாட்டுத் துறை அமைச்சு தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு அழைக்கப்படுவர் என்று விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தாவது:

இந்நாட்டிலிருக்கும் 77 கிரிக்கெட் சங்கங்களில் 68 சங்கங்கள் மாத்திரமே செயற்பாட்டில் உள்ளன. அவற்றுடன் ஏற்கனவே பேச்சு முன்னெடுத்திருந்தாலும் 2024க்கு முன்னதாக மீண்டும் ஒரு முறை அவர்களை சந்தித்து அவர்களின் பொறுப்புக்கள் தொடர்பில் வலியுறுத்தவிருக்கிறோம்.

விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு மேற்படி சம்மேளனங்களின் பிரதானிகளை அழைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனூடாக பேச்சு ரீதியான இணக்கப்பாட்டுடன் அந்தப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

72 சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளதோடு, அதனூடாக விளையாட்டுத்துறை தொடர்பிலான பிரச்சினைகளை ஓரளவிற்கு மட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என நம்புகிறோம்.

சங்கங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முன்கூட்டியே தீர்வுகளை வழங்குவதே இதன் நோக்கமாகும். அதேபோல் விளையாட்டுத்துறை அபிவிருத்தியின் போது ஆவணங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டு கிடக்கும் விளையாட்டுச் சங்கங்களை செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வரவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2024ஆம் ஆண்டில் கிராமங்களுக்கும் விளையாட்டுக்களை கொண்டுச் செல்லும் வகையிலான அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும். அதேபோல் உத்தேச வேலைத்திட்டங்களுக்காக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 125 மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச நிதித் தொகையைக் கொண்டே அந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

அதேபோல், 2024 ஆம் ஆண்டளவில் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பப் பணிகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசியப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் அந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தப் பல்கலைக்கழகத்தில் கல்விமானி பட்டம், விஞ்ஞானமானி பட்டம் வழங்கல் மற்றும் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வீதம் மற்றும் சுற்றாடல் தாக்கங்களை அளவிடுதல் தொடர்பிலான ஆய்வுப் பணிகள் என்பன முன்னெடுக்கப்படும்.

அது தொடர்பிலான தொழில்நுட்ப நிறுவனத்தை, 2024 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் மொறட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியின் பின்னர் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை ஒன்றிணைந்து இராணுவங்களின் கேர்ணல் நிலைக்கு மேற்பட்ட அதிகாரிகளின் பங்கேற்புடன் 15 மோட்டார் சைக்கிள்கள் கொண்ட போட்டியொன்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. டிசெம்பர் 29 நேபாளத்தில் ஆரம்பித்து ஜனவரி 14 இந்தியாவின் ஊடாக இலங்கையை வந்தடைய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் தைப்பொங்கல் தினத்தில் யாழ். காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் போட்டி, காலி முகத்திடன் கலாசார கண்காட்சியுடன் நிறைவடையவுள்ளது.

கீழ் மட்ட ஒழுங்குமுறைகள் மற்றும் பணிகள் தொடர்பிலான தெரிவுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில், நாடாளுமன்றத்திலிருக்கும் இளம் உறுப்பினர்களுக்கு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டங்களில் பங்கேற்க வாய்ப்பளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் பின்னர் மாவட்ட அபிவிருத்திக் குழுவில் பங்கேற்கவும் வாய்ப்பளிக்கப்படவுள்ளது. அதனூடாக இளைஞர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

## அரச மருத்துவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தினர் நேற்று கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, ஹொரண ஆகிய பகுதிகளிலேயே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பு போதனா வைத்தியசாலையின் தொற்றுநோற்கள் பிரிவுக்கு முன்பாகவும், ஏனைய பகுதிகளில் உள்ள மாவட்ட வைத்தியசாலைகளின் முன்றலிலும் அவர்கள் போராட்டங்களை முன்னெடுத்தார்கள்.

இதன்போது, தமக்கு வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டும், நியாயமன்ற வரிகள் குறைக்கப்பட வேண்டும், புத்தி ஜீவிகளின் வெளியேற்றம் தடுக்கப்படவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அத்துடன், வரும் வரவு செலவுத்திட்டத்தில் உரிய பதில் கிடைக்கா விட்டால் போராட்டங்கள் தீவிரமாகி வைத்தியத்துறை முடங்கும் என்றும் எச்சரிக்கை விடுத்தனர்.

## தோல்விக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழுவின் தலைவர் என்ற வகையில் நான் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். நாங்கள் உலக கிண்ணத் தொடருக்குச் செல்லும்போது ஒருதிட்டத்துடனேயே சென்றோம். ஆனால் அணியொன்றின் சூழ்ச்சியால் நாங்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகினோம். அதனை நான் வெளிப்படுத்துவேன்.

நான் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பி ஓடப்போவதில்லை. நான் நிச்சயமாக அனைத்து விடயங்களையும் வெளிப்படுத்துவேன். அணியின் எதிர்காலத்துக்காக அந்த விடயங்கள் மிகவும் அவசியமானவை. ஆகவே அந்தச் செயற்பாட்டை நான் முன்னெடுப்பேன். எனக்குச் சில நாட்கள் கால அவகாசம் வழங்குங்கள். ஆகக்குறைந்தது இரண்டு நாட்கள் தாருங்கள் அனைத்தையும் ஊடகங்களுக்கு தெரிவிக்கின்றேன்.

அதுமட்டுமன்றி எமது அணிக்கு ஆரம்பத்தில் நெருக்கடிகள் காணப்படவில்லை. ஆனால் பின்நாட்களில் நெருக்கடிகள் தீவிரமாகக் காணப்பட்டன. மன உளச்சல்கள் ஏற்பட்டிருந்தன என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நுண், சிறிய, நடுத்தர அளவிலான நிறுவனங்கள் மீட்சிக்கு அவசியமான பரிந்துரைகள் வெளியீடு

பொருளாதார மீட்சிக்கு சமாந்தரமாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் நிலையான மீட்சியை உறுதிப்படுத்துவதில் கவனம்செலுத்துவதுடன், அதனைமுன்னிறுத்தியகூட்டிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமென சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழிலாளர் உத்திகள் பிரிவின் தலைவர் கலாநிதி ரேர் வெரிக் வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாண்மைகள் முகங்கொடுத்துவரும் நெருக்கடிகளைப் புரிந்துகொள்வதற்கு தொழில் அமைச்சுக்கும், ஏனைய சமூகக்குழுக்களுக்கும் உதவும் நோக்கில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலங்கை கிளையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளை உள்ளடக்கிய 'பலதரப்பட்ட நெருக்கடிகளின் விளைவாக இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் மீது ஏற்பட்டுள்ள தாக்கம்' எனும் தலைப்பிலான ஆய்வறிக்கையின் வெளியீட்டு நிகழ்வு வியாழக்கிழமை கொழும்பிலுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

தொழிலாளர் சந்தையை மீட்டெடுப்பதற்கும், சமகால மாற்றங்களுக்கு ஏற்றவாறான உத்திகளை வகுப்பதற்குமான தகவல்களை வழங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வு இவ்வாண்டு ஜனவரி- மார்ச் மாதத்துக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு அமைந்திருக்கின்றது.

அதன்படி பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த 500 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் தொடர்பான கணக்கெடுப்பு, நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட 50 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் தொடர்பான கணக்கெடுப்பு, அரச மற்றும் அரச சார்பற்ற கட்டமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் ஆகிய மூன்றுமே இந்த ஆய்வுக்கான பிரதான தகவல் மூலங்களாகும்.

இந்த ஆய்வின் பிரகாரம் நாட்டிலுள்ள அநேகமான நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் கடன்கள் மற்றம் குத்தகைகளை திருப்பிச்செலுத்த இயலாமை, இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக மூலப்பொருள்களின் விலையேற்றம் மற்றும் விநியோகத் தட்டுப்பாடு, எரிபொருள் விலையேற்றம், மின்கட்டண உயர்வு போன்றவற்றின் காரணமாக அதிகரித்த செலவினங்கள் மற்றும் அவற்றுக்கான தட்டுப்பாடு, புலம்பெயர்வின் காரணமாக திறமையான தொழிலாளர்களுக்கான பற்றாக்குறை, பணவீக்கத்தின் விளைவாக நுகர்வோர் மீது ஏற்பட்ட மிகையான அழுத்தத்தால் ஆடைகள், பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள்கள், பேக்கரி உற்பத்திகள் போன்றவற்றுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்துள்ளமை, உக்ரேன் - ரஷ்ய போர் மற்றும் இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் போன்ற உலகளாவிய நிலைவரங்களின் காரணமாக ஏற்றுமதிகளுக்கான தேவைப்பாட்டில் வீழ்ச்சி, உரத்தட்டுப்பாடால் விவசாயப் பயிர்ச்செய்கை விளைச்சலில் வீழ்ச்சி போன்ற நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் வேலைவாய்ப்புக்கள் மற்றும் நெகிழ்வான வணிகங்களை உருவாக்குதல், திறன்களையும் பொருத்தப்பாடுடைய தன்மையையும் மேம்படுத்துதல், சிறந்த சேவை வழங்கலுக்கான ஒழுங்குமுறை சீர்திருத்தத்தை மேற்கொள்ளல் ஆகிய மூன்று பிரதான விடயங்களை அடிப்படையாகக்கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் மீள்நிலைத்த தன்மையை உறுதிப்படுத்தமுடியும் என அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச்செய்யக்கூடிய உலகளாவிய பொருளாதார சூழலைக் கட்டியெழுப்பல், நுண்பாகப் பொருளாதாரக் கொள்கை மறுசீரமைப்புக்களுடன் தொடர்புடைய தொழிலாளர் சந்தைத் தாக்கங்களைக் கண்காணித்தல், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளின் கட்டணங்களைக் குறைப்பதற்கு ஏதுவான கட்டமைப்பு மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல், குறிப்பிட்ட தொழிற்துறைகளுக்கு ஏற்றவாறான ஆதரவை வழங்கல், பொருளாதாரத்தின் விநியோகச்சங்கிலியை வலுப்படுத்தல், சந்தை வாய்ப்புக்களை ஊக்குவித்தல், ஆலோசனை மற்றும் பயிற்சி வழங்கல் மூலம் தொழிலாளர் திறனை மேம்படுத்தல், உற்பத்தித்திறன் அதிகரிப்பு மற்றும் மனித மூலதனப் பாதுகாப்பு போன்றவற்றை உறுதிப்படுத்தல், ஊதியம் பெறும் தொழிற்படையில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல், நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்பல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் செயற்திறனை மேம்படுத்தமுடியும் எனவும் அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, இந்த ஆய்வறிக்கை வெளியீட்டுநிகழ்வில் உரையாற்றிய சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழிலாளர் உத்திகள் பிரிவின் தலைவர் கலாநிதி ரேர் வெரிக், கடந்த சில வருடங்களாக கொவிட் - 19 வைரஸ் பெருந்தொற்று மற்றும் பொருளாதார மந்தநிலை போன்றவற்றின் விளைவாக உலகநாடுகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவருவதாகவும், தற்போது உலகளாவிய ரீதியில் நிலவும் நாடுகளுக்கு இடையிலான போர் உள்ளிட்ட சமகால நிலைவரங்கள் இதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி, அண்மையகாலங்களில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் கடன்மீள்செலுத்துகை நெருக்கடிக்கு முகங்கொடுத்துவருவது பற்றி பிரஸ்தாபித்த அவர், நுண்பாகப்பொருளாதார சிக்கல்கள் மற்றும் கடன்களில் சமநிலையின்மை போன்றவற்றால் இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவித்தார்.

அதேவேளை பொருளாதார மீட்சிக்கு சமாந்தரமாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் நிலையான மீட்சியை உறுதிப்படுத்துவதில் கவனம்செலுத்துவதுடன், அதனை முன்னிறுத்திய கூட்டிணைந்த நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தினார். (05)

## வரி அதிகரிப்புக்கு முன் இறக்குமதி செய்யப்பட்ட சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலை 275 ரூபா

### உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தகவல்

*வரி அதிகரிப்புக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட சீனியை விற்பனை செய்வதற்கு 275 ரூபா அதிகபட்ச சில்லறை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்காணிப்பதற்காக இறக்குமதியாளர்களின் களஞ்சியசாலைகளில் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.*

*பருவகாலத்தில் முட்டை விலை அதிகரிக்கப்பட்டால், அதனை இறக்குமதி செய்யும் காலமும் நீடிக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர், கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப்பட்டால் அதற்கும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.*

*ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -*

*அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக வரிகளை அதிகரிக்க வேண்டியேற்பட்டது. அந்த அடிப்படையில் 25 சதமாகக்காணப்பட்ட சீனிக்கான இறக்குமதி வரி 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டிருப்பார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். எனவே நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய அதிகபட்ச சில்லறை விலை 275 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.*

*வரி அதிகரிப்பதற்கு முன்னர் காணப்பட்ட சீனி தொகையை சில மாதங்களுக்கு 275 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ள முடியும். எமக்கு வரி வருமானமும் அவசியம். நுகர்வோரின் பாதுகாப்பும் அவசியமாகும். 2024இல் உணவு பாதுகாப்பு தொடர்பில் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.*



*அத்தோடு வரவு - செலவுத்திட்டத்தின் ஊடாக உணவு பணவீக்கத்தை குறைக்கவுள்ள அதேவேளை, அடுத்த வருடத்தில் உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.*

*நாட்டில் சீனி இறக்குமதி செய்யும் 14 இறக்குமதியாளர்களில் 12 பேரிடம் பழைய சீனி தொகை களஞ்சியசாலைகளிலுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. அந்த களஞ்சியசாலைகளில் நுகர்வோர் அதிகாரிகள் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதற்கமைய கட்டுப்பாட்டு விலையின் கீழ் விற்பனை செய்யக் கூடிய சீனியின் அளவு அவர்களால் நேரடியாக மதிப்பிடப்படும்.*

*எனவே பழைய சீனி தொகையை நிர்ணய விலையை விட அதிக விலைக்கு விற்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது மாதாந்தம் 45 தொன் சீனி இறக்குமதி செய்யப்படுகிறது. அவ்வாறிருக்கையில் 25 சதம் வரி அறவிடுவது பிரயோசனமற்ற விடயமாகும். அஸ்வெசும கொடுப்பனவு, அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு மத்தியில் 25 சதம் வரி அறவீட்டால் எவ்வித பயனையும் பெற்றுக் கொள்ள முடியாது.*

*தற்போது நாம் மாதாந்தம் 30 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்கின்றோம். டிசெம்பர் 31ஆம் திகதி வரை இறக்குமதி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். இறக்குமதி செய்யப்படும் முட்டை 35 ரூபாவுக்கும், உள்நாட்டு முட்டைகளை 43 - 47 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்திருக்காவிட்டால் அவற்றின் விலை 90 ரூபா வரை அதிகரித்திருக்கும்.*

*எனினும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுத்திருக்கின்றோம். அடுத்த மாதம் பருவகாலம் என்பதால் முட்டைக்கான கேள்வி அதிகமாகக் காணப்படும். எனவே உற்பத்திகளை அதிகரிக்க உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை விடுத்து விலைகளை அதிகரிக்க முயற்சித்தால் முட்டை இறக்குமதிக்கான காலம் நீடிக்கப்படும்.*

*கோழி இறைச்சியின் விலை 1150 ரூபாவை விட அதிகரித்தால் நிச்சயம் கட்டுப்பாட்டு விலையொன்றை நிர்ணயித்தல் தொடர்பிலும், இறக்குமதி தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும். வெவ்வேறு விலைகளில் கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றபோதிலும், சராசரி விலை தொடர்பிலேயே நான் இதனைக் குறிப்பிடுகின்றேன் - என்றார். (05)*

## 95 வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயத்தில்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

நாடளாவிய ரீதியில் வைத்தியர்கள் தட்டுப்பாடு காரணமாக 20 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதோடு, 95 வைத்தியசாலைகள் மூடப்படக்கூடிய கட்டத்தில் உள்ளன. ஒரு வருட காலத்துக்குள் சுமார் 1500 வைத்தியர்கள் சேவையிலிருந்து விலகியுள்ளமையே இதற்கான காரணமாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார். அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் - வரலாற்றில் என்றும் இல்லாதவாறு வைத்தியர்கள் சேவையிலிருந்து விலகும் நிலைமை தற்போது நாட்டில் காணப்படுகிறது. விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட சுமார் 1500 வைத்தியர்கள் ஒரு வருடம் என்ற குறுகிய காலத்துக்குள் சேவையிலிருந்து விலகியுள்ளனர்.

இது நாட்டிலுள்ள மொத்த வைத்தியர்களில் நூற்றுக்கு 5 சதவீதமாகும். 2022 இல் காணப்பட்ட மொத்த வைத்தியர்களில் 5 சதவீதமானோர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

அடுத்து நாம் எதிர்கொள்ளவுள்ள அபாயம் யாதெனில் வைத்தியர்களுக்கான சகல தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள 5000 பேர் நாட்டை விட்டு வெளியேறக் காத்திருக்கின்றனர். எனவே, இவற்றைத் தடுப்பதற்கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். ஒட்டுமொத்த வைத்திய கட்டமைப்பிலிருந்து 5000 பேரை ஒரே சந்தர்ப்பத்தில் இழக்க நேரிட்டால் அது நூற்றுக்கு 25 சதவீத இழப்பாகும். ஒரே சந்தர்ப்பத்தில் வைத்திய கட்டமைப்பில் 25 சதவீத மனித வலுவை இழக்க நேரிட்டால், அதனை இலகுவில் ஈடுசெய்யவோ, தாங்கிக்கொள்ளவோ முடியாது.

இந்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் மதிப்பீடுகளை முன்னெடுத்துள்ளது. அதற்கமைய யுத்த காலத்தில் கூட இல்லாதவாறு வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. மயக்க மருந்து நிபுணர்கள் இன்மையால், அது தொடர்பான நிபுணத்துவமற்ற வைத்தியர்களே மயக்க மருந்துகளை வழங்கி, சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளவேண்டிய அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு வைத்தியர்கள் தட்டுப்பாடு காரணமாக நாடளாவிய ரீதியில் 20 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், புத்தளம், நுவரெலியா மாவட்டங்களிலும் பெரும்பாலான வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. இவை தவிர, மேலும் 44 வைத்தியசாலைகளில் பட்டதாரி வைத்தியர்கள் இன்றி பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்களால் மாத்திரம் சேவைகள் வழங்கப்படும் நிலைமை காணப்படுகிறது. யுத்த காலத்தில் காணப்பட்டதை விடவும் மோசமான நிலைமைக்கு வைத்திய கட்டமைப்பு சென்று கொண்டிருக்கிறது. எனவே, ஆட்சியாளர்கள் இப்போதாவது முற்போக்கான தீர்மானங்களை எடுக்க வேண்டும். அது மாத்திரமின்றி, ஏற்கனவே மூடப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக இனிவரும் காலங்களில் 95 வைத்தியசாலைகள் மூடப்படக்கூடிய கட்டத்தை அடைந்துள்ளன.

ஒன்று அல்லது இரண்டு வைத்தியர்களுடன் இயங்கும் வைத்தியசாலைகளே இந்த நிலைமையில் காணப்படுகின்றன. அவற்றிலுள்ள வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு செல்லவோ அல்லது அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு இடமாற்றத்தைப் பெற்றுக்கொள்ளவோ எதிர்பார்த்துள்ளனர். சேவை வழங்கிக்கொண்டிருக்கும் ஓரிரு வைத்தியர்களும் இவ்வாறு வெளியேறிவிட்டால் அந்த வைத்தியசாலைகளை மூடுவதைத் தவிர மாற்று வழியில்லை. அத்தோடு 150 வைத்தியசாலைகளில் எதிர்பார்க்கும் சேவைகளைப் பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதாவது இதற்கு முன்னர் நாளொன்றில் 10 சத்திர சிகிச்சைகளேனும் மேற்கொள்ளப்பட்ட வைத்தியசாலைகளில், இன்று அந்த சேவைகளை வழங்க முடியாத நிலைமை காணப்படு கிறது. இதே போன்று மேலும் 168 வைத்தியசாலைகள் இவ் வாறு சேவைகள் முடங்கக்கூடிய நிலைமையில் காணப்படுகின்றன. இந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முறையான நடவடிக்கைகளையும் எடுக்கப்படாவிட்டால் நாம் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குத் தயாராவோம் (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாற்று வழிகள்தான் முக்கியம்

அண்மைக் காலமாக வடக்கு மீனவர்களிடம் இருந்து ஒரு குரல் தொடர்ந்து ஒலிக்கின்றது. இந்திய இழுவைமடிப் படகுகளால் தமக்கு ஏற்படும் பாதிப்புக் குறித்து தமிழ்நாடு அரசின் ஆளும் தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. இந்தக்கோரிக்கை, வலியுறுத்தல்களின் பின்னணியில் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருக்கிறார் என்பது வெளிப்படை. ஏனெனில் மீனவர்கள் படகுகளில் சென்று தமிழ்நாட்டில் தமது பிரச்சினைகளை முன்வைப்பார்கள், அதற்கு அனுமதி கிட்டாவிட்டால் வான்வழியாகச் சென்று அதனைச் செய்வார்கள், அதற்காக உண்டியல் குலுக்கி பணம் சேகரிக்கப்படும் என்றெல்லாம் அமைச்சரே இந்த விடயத்தை முதலில் வெளிப்படுத்தியிருந்தார்.

அதுமட்டுமல்ல இங்குள்ள ஏனைய தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் இதுவிடயம் தொடர்பில் பேசிப் புரியவைக்கவேண்டும் என்றும் அமைச்சர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார். இந்தப் பின்னணியிலேயே கடற்றொழிலாளர்கள் சங்கங்களும் அண்மைக் காலமாக இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் வாயிலைப் பூட்டி மறியல் போராட்டத்தில் ஈடு–பட்ட நிலையிலும் மீனவர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினர்.

இந்தியமீனவர்கள்எல்லைதாண்டிவந்துமீன்பிடிக்கின்றபோதும் அவர்கள் இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்தே இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுகின்றனர், கைது செய்யப்படுகின்றனர் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்ந்து தெரிவித்துவரும் கருத்து தவறானது, திரிபுபடுத்தப்பட்டது என்பதால் அவர்களுக்கு உண்மையைப் புரிய வைக்கவேண்டும் என்பதே அமைச்சரின் கருத்து. அதனையே மீனவர் சங்கங்களும் இப்போது ஒத்தூ–துகின்றன.

இந்திய மீனவர்களின் படகுகள் எல்லைமீறி வந்து மீன்பிடியில் ஈடுபடுவதாலேயே கைது செய்யப்படுகின்றன என்பது இந்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் நன்கு தெரியும். இந்தியாவிடம் சொந்தமான செய்மதிகள் இருக்கும் நிலையில் அவற்றின் ஊடாக எடுக்கப்படும் படங்கள் வழியே இந்தியப் படகுகள் இலங்கை எல்லைக்குள் ஊடுருவுவதை மிகத் தெளிவாகக் காணமுடியும். அத்தகைய ஆதாரங்கள் இந்திய மற்றும் தமிழ்நாடு அரசுகள் வசம் இருக்கின்றன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வங்காள விரிகுடாக் கடலில் எல்லைப் பிரிகோடு என்பது எப்போதும் கண்ணுக்கத் தெரியக்கூடிய ஒன்றல்ல. அதனால் மீனவர்கள் எல்லைதாண்டி வருவது போன்றே கடற்படையினரும்கூட சில சமயங்களில் தமது எல்லையைக் கடந்து சென்று இந்திய மீனவர்களைக் கைது செய்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இது எப்போதும் நடக்கின்றது என்று சொல்ல முடியாவிட்டாலும், இந்தியப் படகுகளைத் துரத்திச் சென்று கைது செய்யும் சமயங்களில் சிலவேளைகளில் இவ்வாறு நடப்பதற்கான வாய்ப்புகளையும் நிராகரிக்க முடியாது. அதுவும் தவிர மீனவர்கள் தாம் எல்லை தாண்டிச் செல்லவில்லை என்று வழங்கும் தகவல்களின் அடிப்படையிலேயே, தமிழ்நாடு அரசும் பேசுகின்றது. எனவே தமிழ்நாடு அரசுக்கு தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை தாண்டுகின்றார்கள், அதனால் கைது செய்யப்படுகின்றார்கள் என்று புரிய வைப்பதன் மூலம் மட்–டுமே இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டாதிருப்பதை உறுதிப்படுத்தக்கூடியதான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இதற்காக இரு தரப்புக் கடற்படையினரும் எல்லையில் தொடர் காவல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பான யோசனைகள் இதற்கு முன்னரும் ஆராயப்பட்டிருக்கின்றன. ஆனால், அதிக செலவு மிக்க அந்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதில்லை. அந்த யோசனைகளுக்கு உள்ளூரில் கடும் எதிர்ப்பு இருந்ததும் மற்றொரு காரணம். கண்ணுக்குத் தெரியாத எல்லைப் பிரிகோட்டை மீனவர்கள் தாண்டாதிருக்கவேண்டுமானால் அதற்கான நடவடிக்கைகளை இலங்கை மற்றும் இந்திய அரசுகளாலேயே மேற்கொள்ள முடியும். தமிழ்நாட்டு அரசினால் அல்ல.

மீனவர்கள் எல்லை தாண்டுகின்றனர் என்பதை தமிழ்நாடு அரசுக்குப் புரிய வைப்பதன் மூலம் ஒருபோதும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது. அப்படிப் புரிய வைத்தாலும் மீனவர்கள் எல்லை தாண்டுவதைத் தமிழ்நாடு அரசால் கட்டுப்படுத்த முடியாது. எனவே இந்திய மீனவர் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிறன் மிக்க நடவடிக்கைகளின் மீது கவனம் செலுத்தப்படவேண்டுமே தவிர, வெறும் அரசியல் கோரிக்கைகளின் பக்கம் இந்தப் பிரச்சினையைத் திசை திருப்புவதால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை.

தமிழ்நாட்டு மீனவர்களை ஆழ்கடல் தொழிலுக்கு மாற்றும் யோசனை உட்பட மாற்றுத் திட்டங்களைச் செயற்படுத்துவதும் எல்லைகளில் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதும்தான் இந்தப் பிரச்சினைகளுக்கு ஓரளவுக்குத் தீர்வாக அமையமுடியும் என்பது ஏற்கனவே ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகள் மீதே கவனம் குவிக்கப்படவேண்டும்.




# ஆங்கிலத்தின் முக்கியத்துவம்!

**வசந்தி தயாபரன்**




அண்மையில் ஆங்கிலத்தின் முக்கியத்துவம் பற்றிய பயன்மிக்க பதிவொன்றை யூடியூப்பில் காணும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றேன். அதன் பெறுமதி கருதி அது குறித்த எனது மனப்பதிவுகளை இங்கு பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

இந்த விடயம் குறித்து அம்பலவாணர் துரைசிங்கம் ஏற்கனவே நூல்கள் கையேடுகள் என்பவற்றின்வழியே சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார். ஒளியும் ஒலியும் இணைந்த இந்தப் பதிவு மேலும் ஒரு பரந்த வட்டத்தைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்குடன் தயாரிக்கப்பட்டுள்ளமை பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

'இங்கிலீப் படி' என்று மூத்த தலைமுறையினர்கூட எம்மை நச்சரித்தது உண்டுதான். பாடசாலையில் புள்ளிகளைப் பெறுவதற்காகவும் வீட்டில் அடி வாங்காமல் இருப்பதற்காகவும் வேறுவழியின்றி ஆங்கிலத்தைப் படித்தவர்கள் பலர். ஆங்கிலத்தை சுவையாகக் கற்பிக்கும் ஆசிரியர்கள் வாய்கப்பெற்று விருப்புடன் ஆங்கிலத்தைக் கற்றுத் தேறியவர்களும் இல்லாமல் இல்லை.

இன்றுமுன்னரைப்போலன்றி எந்த ஒரு விடயத்தையும் காரண காரியத்துடன் தர்க்கரீதியாகவே பிள்ளைகளுக்குப் புரியவைக்க வேண்டிய தேவை எமக்குள்ளது. அந்தத் தேவையை நிறைவு செய்யும் வகையில் துரைசிங்கம் அவர்களது இப்பதிவு அமைந்துள்ளது நிறைவைத் தருகிறது.

அம்பலவாணர் துரைசிங்கம் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் ஒரு விடயத்தை எடுத்துரைக்கிறார். அது மொழிச் சிக்கலால் எதுவுமே தவறவிடப்படல் ஆகாது என்ற அவரது உயர் நோக்கத்தையும் அவரே ஆரம்பத்தில் குறிப்பிடுவதுபோன்று ஆற்றல் இருந்தும் வாய்ப்பில்லாத மாணவர்களை தனது கருத்துக்கள் சென்றடையவேண்டும் என்பதில் அவருக்குள்ள கரிசனையையும் உணர்த்துகிறது.

ஒருவரை மகிழ்வாக வைத்திருக்க எண்ணினால் அவரை வாழ்த்துவது எப்படி அதுவும் புன்சிரிப்புடன் கண்களைப்பார்த்து வாழ்த்துவது எப்படி, என்ன சொற்கள் அதற்குப் பொருத்தமானவை என்று ஒரு தொடக்கப் புள்ளியைஇட்டுக்கொண்டு மெல்ல மெல்ல ஆழமான விடயங்களை நோக்கி நகருகின்ற அவரது பணி நீண்டகால கற்பித்தல் பணியின் அனுபவத்தைப் பறைசாற்றுகின்றது.

ஏன் உலக அரங்கிலே ஆங்கிலம் முக்கியத்துவம் பெறுகின்றது? இந்த வினாவை எம் மனதில் எழுப்பி படிப்படியாக அதற்கான விடையை அவர் ஆராய்கிறார். 1950களின் முன்னும் பின்னுமான கல்விப் போதனா மொழி பற்றிய குறிப்புக்கள் அதற்கு எம்மை நெறிப்படுத்தகின்றன. ஒரு காலத்தில் ஆங்கிலம் மேட்டுக்குடியினரின் சொத்தாக அறியப்பட்டமை பற்றியும் ஆங்கிலம் புகட்டுவதில் உகந்த முறைகள் பின்பற்றப்படாமை பற்றியும் அவர் கூறுகிறார்.

உலகில் எத்தனையோ மொழிகள் நிலவியபோதும் ஆங்கிலத்திற்கு ஏன் முக்கியத்து–வம் வழங்கப்படுகிறது என்ற கேள்வி எம்மத்தியில் ஏற்படுவது இயல்பே. 53 நாடுகளில் அரச மொழியாக 400 மில்லியன் மக்களின் முதன்மொழியாக உலகளாவிய ரீதியில் பரவலான இரண்டாம்மொழியாக ஆங்கிலம் வியாபித்துள்ளது. பல்வேறுமொழி பேசும் மக்களை 'இணைக்கின்ற' ஒரே மொழி பன்மைத்துவக் கலாசாரத்தைப்புரிந்துகொள்ளவும் அதன் மூலம் மனிதகுலத்தின் புரிந்துணர்வை வளப்படுத்தவும் உதவும் மொழி, மனிதகுலத்தின் ஒற்றுமைக்கு வழிகோலும் மொழி எனப் பலவாறாக ஆங்கிலத்தின் பயன்பாட்டை அலசுகிறார் ஆசிரியர். 'உலகமே ஒருகிராமம்' என்றவாறு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் நாளுக்கு நாள் வளர்ச்சி காண்கின்றன. ஆகவே கல்வி, தொழில்வாய்ப்பு, பயணங்கள், சர்வதேசத்துடனான தொடர்பாடல்திறன், வர்த்தகம், என எண்ணற்ற வாய்ப்புக்களுக்கான வாசல்களை ஆங்கிலம் திறந்துவிடுகிறது என்பதை தெளிவாகவும் விவரமாகவும் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். இன்றைய தகவல் மயமான உலகில் இணையவழியான தொடர்பாடலுக்கு அதன் இன்றியமையாமையும் சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

ஆங்கில மொழித்திறனை எவ்வாறுவிருத்திசெய்துகொள்வது என்ற தனது கருத்துக்களை அவர் சுவைபட எடுத்துரைக்கிறார். மொழித்திறன் என்பது செவிமடுத்தல் பேசுதல் வாசித்தல் எழுதுதல் எனும் நால்வகைத் திறன்களின் கூட்டு என்ற அறிமுகத்துடன், அத் திறன்களை எவ்வகையில் நாம் வளர்த்துக்கொள்வது என்பதற்கான எளிமையான வழிகளையும் அவர் சுட்டுகிறார். பொது–வாக உச்சரிப்பு சரியானதுதானா என மனதில் எழும் தயக்கத்தைப் போக்க நாக்கு, பல், உதடு, அண்ணம் என்பவற்றின் துணைகொண்டுதொடர்ந்துபயிற்சி செய்யுமாறு அவர் ஆலோசனை கூறுகிறார். உரத்து வாசித்தல், அகராதியைப் பயன்படுத்துதல், எழுத்துக்கூட்டல், மனப்பாடம் செய்தல் என நாம் செய்யக் கூடியவற்றைத் தெரிவிப்பதுடன் பாடசாலைகளில் 'வாசிப்பு' என்ற கற்றல் முறையினை மீண்டும் அமுல்படுத்துவது பற்றியும் அவர் கருத்துரைக்கிறார். அவை கல்விசார்சமூகத்தின்கவனத்துக்கு உரியவை.

ஆங்கிலமொழி அறிவு அல்லது திறன் என்பது தனிமனிதனுக்கு மட்டுமன்றி சமூகத்திற்கும் பயன்படுவது என்ற சிந்தனை எம்மனதில் எழுகிறது. அவ்வகையில் மேடைப்பேச்சு பற்றியும் அது சார்ந்து எழக்கூடிய கூச்ச உணர்வு பற்றியும் அதனை வென்று வெற்றிநடைபோடுதல் பற்றியும் முக்கியமான பல கருத்துக்களையும்நாம்அறிந்துகொள்ள முடிகிறது.

மாணவர்களை இலக்காகக் கொண்ட இந்த உரைப்பேழையில் சுவையான பல தகவல்கள் உதிரியாகத் தூவப்பட்டுள்ளமை அதன் சுவையைமேம்படுத்துகிறது. சிறிய கதை ஒன்று சொல்லப்படுகிறது. அவ்வாறே முதலாவது அகராதியைவெளியிட்ட டாக்டர் சாமுவேல் ஜோன்சனின் வாழ்க்கையில் அவர் எத்தனை தடைக்கற்களைத் தாண்டிவந்தார் என்றபதிவின்வழி மாணவர்களின் மனஓர்மத்தை வளர்தெடுக்க விரும்புகின்ற ஒரு நேயராகவும் அவரது ஆளுமை வெளிப்பட்டுள்ளது. 'இளமையிற் கல்' என்ற முதுமொழி எமது மனதில் மேற்கிளம்புகிறது.

மொழி ஆர்வலர் என்ற முறையில் அம்பலவாணர் துரைசிங்கம் அவர்கள் மேற்கொண்டுள்ள இப்பணி ஆசிரியர், பெற்றோர், மாணவர் என்ற பலநிலைகளிலும் நன்மை பயப்பது என்பதில் ஐயமில்லை. தாய்மொழியைத் தலைமேற்தாங்கிப் போற்றியும், ஆங்கிலத்தைக் கைவசப்படுத்தியும்வாழ்கின்றஎதிர் காலச்சந்ததியை நோக்கி இப்பணி மேலும் விரிவு பெறுவதற்குரியது. அதனைஅனைவரும்ஒருதடவை பார்ப்பது அவசியம்.

காலைக்கதிர் Kalaikkathir

# கிரிக்கெட் சபையின் குழப்பத்தின் பின்னணியில் இந்தியா ஆதிக்கம்

## விமல் வீரவன்ஸ சாடல்



இலங்கை கிரிக்கெட் சபையின் குழப்பத்தின் பின்னணியில் இந்தியாவின் ஆதிக்கம் உள்ளது. கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்க நிதியில்லை. ஆனால் கிரிக்கெட் சபையின் ஆலோசகராக பதவி வகிக்கும் மஹேல ஜயவர்தனவுக்கு மாதம் 27 ஆயிரம் டொலர் சம்பளம் வழங்க முடியுமா? என தேசியசுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன எதிரணியின் உறுப்பினருமான விமல்வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகார சபையின்தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய சட்ட கட்டமைப்பை சட்டமூலம் ஊடாக அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது -

ஐ.சி.சி.யின் தலைவர் தனியார்விமானத்தில்வருகை தந்து, ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதியின் பிரதானி சாகல ரத்னாயக்கவை சந்தித்துள்ளார். இதன்போது இலங்கைகிரிக்கெட் சபைக்கு உள்ள அநாவசிய அழுத்தங்களைக் குறைக்க நடவடிக்கைஎடுக்குமாறு அவர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார் என எமக்குத் தெரியவந்துள்ளது. அவரைப்பொறுத்தவரை இலங்கை கிரிக்கெட் சபையை பாதுகாக்க வேண்டும்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இடம்பெற சிறிது காலத்திற்கு முன்னர் ஏதற்காக எல்பிஎல் போட்டியை நடத்த வேண்டும் இதனால்தான் சிறந்த வீரர்கள் காயமடைந்தார்கள். உலகக்கிண்ண தொடரிலும் இவர்களால் விளையாட முடியாமல் போனது. ஐ.சி.சியின் தலைவர்தான் எல்.பி.எல். போட்டியை உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இடம்பெற சிறிது காலத்திற்கு முன்பாக நடத்துமாறு இலங்கை கிரிக்கெட் சபைக்கு பணித்தாரோ தெரியவில்லை.

கிரிக்கெட் விளையாட்டில் இந்தியாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. எனவே இலங்கை கிரிக்கெட் சபையின் குழப்பத்தின் பின்னணியில் இந்தியாவின் ஆதிக்கம் இருப்பதாக சந்தேகிக்க வேண்டியுள்ளது.

ஸ்ரீலங்காகிரிக்கெட் சபை இந்தஆண்டு6பில்லியன்ரூபா இலாபமடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இலாபம் பெறும் நோக்கத்தில் கிரிக்கெட் சபை உருவாக்கப்படவில்லை.

பாடசாலை கிரிக்கெட் அணிகளைதேசியமட்டத்தில் கொண்டு செல்ல வேண்டும். திறமையான கிரிக்கெட் அணியை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படை கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் கிரிக்கெட் சபை செயற்படுகிறது.

கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு வேண்டிய வசதிகளை பெற்றுக்கொடுப்பற்கு போதிய நிதியில்லை என்று குறிப்பிடப்படுகிறது.

ஆனால் சபையின் ஆலோசகராக தெரிவு செய்யப்பட்ட மஹேல ஜயவர்தனவுக்கு மாதம் 27 ஆயிரம் டொலர் சம்பளம் வழங்கப்படுகிறது. நான் நினைத்தேன் இவர் சேவை அடிப்படையில் தான் ஆலோசனை வழங்குகிறார் என்று. இந்த விடயம் பற்றி அவர் ஏதும் குறிப்பிட்டால் நான் பல விடயங்களை வெளிப்படுத்துவேன். - என்றார். (05)



## அமெ. பசுபிக் சிறப்பு நடவடிக்கை கட்டளை தளபதி பாதுகாப்பு செயலர் கமல் குணரத்னவுடன் சந்திப்பு

இலங்கை வந்துள்ள அமெரிக்க பசுபிக்சிறப்புநடவடிக்கைக்கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ஜெரோமி பி வில்லியம்ஸ் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கோட்டைஸ்ரீஜயவர்தனபுரவில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகைதந்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரியை வரவேற்ற பாதுகாப்பு செயலாளர் அவருடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது இரு நாடுகளுக்கிடையில் உள்ள பாதுகாப்புஒத்துழைப்பைமேலும்மேம்படுத்துவது மற்றும் பயிற்சி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ரியர் அட்மிரல் வில்லியம்ஸ் தற்போதைய நியமனத்தை ஏற்றுக்கொண்ட பின்னர், இலங்கையின் பாதுகாப்புஅமைச்சுக்குமேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தம்மிக்க வெலகெதர மற்றும் சிரேஷ்ட உதவி செயலாளர் சிந்தக்க அபேகோன் ஆகியோரும் கலந்துகொண்டார். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,

ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir



### சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இலங்கைக்கு

# கிரிக்கெட் சபைக்கு தடைவிதித்தால் நாடாளுமன்றமே அதற்குப் பொறுப்பு

### அமைச்சர் காஞ்சன எச்சரிக்கை



கிரிக்கெட் சபை தொடர்பில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் சர்வதேசகிரிக்கெட்கவுன்சில் இலங்கைகிரிக்கெட்சபைக்கு தடை விதித்தால் அதன் பொறுப்பை நாடாளு மன்றத்தை பிரதிநிதித்து-வப்படுத்தும் 225 நாடாளு மன்ற உறுப்பினர்களும் பொறுப்பேற்க வேண்டும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகார சபையின்தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய சட்டக் கட்டமைப்பை சட்டமூலம் ஊடாக அனுமதிக்கும் பிரேரணைமீதானவிவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

இலங்கை கிரிக்கெட் சபையின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நான்கு பேர் கொண்ட அமைச்சரவை உபகுழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை உபகுழுவின் நோக்கம் தேசிய அணியையோ அல்லது நிர்வாகத்தையோ தேர்ந்தெடுப்பது அல்ல. கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்பை உருவாக்கி அதனை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதற்கேயாகும்.

இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பில் இங்கு பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளதீர்மானங்களின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் சபை, இலங்கை கிரிக்கெட் சபைக்கு தடை விதிக்க முடிவு செய்தால் அதற்கு இந்த நாடாளுமன்றத்தை பிரதிநிதித்து-வப்படுத்தும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்பு கூற வேண்டும். - என்றார்.

(05)

## துப்பாக்கியுடன் இளைஞர் நிலாவெளியில் கைது

திருகோணமலை-நிலாவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் புதன்கிழமை கைது செய்-யப்பட்டுள்ளதாக நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை, அண்ணாபுரம் பிரதேசத்தை சேர்ந்த 23 வயது இளைஞர் ஆவார். இந்தசம்பவம்தொடர்பான மேலதிகவிசாரணைகள்நிலாவெளி பொலிஸாரால்மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (05)





## கறுவா மரக்கன்றுகள் மாணவருக்கு விநியோகம்

மரநடுகை மாதத்தை முன்னிட்டு, தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தால் வடமாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் வியாழக்கிழமை பலாலி வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கு கறுவா மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் ச.விஜய குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி வைத்தார். பொருளாதாரப் பயன்கருதி அண்மைக்காலமாக வடக்கிலும் கறுவாச் செய்கை முக்கியத்துவம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் தேசிய போராட்டத்திற்கு எமது ஆதரவு என்றும் உண்டு

## யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் அறிவிப்பு

தமிழ்த் தேசியம் சார்ந்து ஜனநாயகரீதியில் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளுக்கும்எமது ஆதரவு உண்டு' என யாழ். பல்கலைகழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து யாழ். பல்கலைகழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவைவருமாறு -

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும்கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்களும்இணைந்து, கடந்த ஞாயிறுக்கிழமை மட்டக்களப்பு, மயிலத்தமடு - மாதவனைப் பகுதி மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிவரும் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு ஆதரவாகஅமைதியானமுறையில் ஜனநாயக ரீதியில் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அப்போராட்டம் எவ்வித குழப்பங்களும் இன்றி யாருக்கும் இடையூறுகளுமின்றி நடைபெற்று முடிந்த பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவர்களை வந்தாறுமூலைப் பகுதியில்இடைமறித்துஅவர்களில் 06 மாணவர்களைக் கைது செய்தனர்.

இது ஒருதிட்டமிட்ட ஜனநாயக விரோதச் செயற்பாடு ஆகும். இச் செயற்பாடு ஜனநாயக ரீதியில் போராடும் மாணவர்களினதும் ஏனையவர்களினதும் செயற்பாடுகளை அச்சுறுத்தும், அரச படைகள் மூலம் அடக்கும் நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம். இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் எதிர்காலத்தில் முன்னெடுக்கக்கூடாது என கோருவதோடு, கைதுசெய்யப்பட்டு வழக்குப்பதியப்பட்ட மாணவர்கள் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டி நிற்கின்றோம்.

அதேவேளை பல்கலைக்கழக மாணவர்களாலும் ஏனையோராலும் தமிழ்த் தேசியம் சார்ந்து ஜனநாயகரீதியில் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது ஆதரவு உண்டு என்பதோடு அச்செயற்பாடுகளில்அவர்களுடன் இணைந்து நிற்போம் எனவும் தெரிவித்துக்கொள்கிறோம். - இவ்வாறு குறிப்பிடப்பட்டுள் ளது. (05)

# ஜே.வி.பி. கட்சியினர் மீது மக்களுக்குச் சந்தேகமாம்

## பிரசன்ன ரணதுங்க சாடல்



தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோது, சபையில் இல்லாத காரணத்தால் மக்களுக்கு ஜே.வி.பியின் மீது சந்தேகம் ஏற்பட்டது என ஆளும் தரப்பு பிரதம கொரடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும்தெரிவிக்கையில் -

அநுரகுமார திஸாநாயக்க கோபமடையும் வகையில், நான் சபையில் கருத்து வெளியிடவில்லை. ம்மி சில்வாவிடமிருந்து ஜே.வி.பிக்கு பணம் வந்ததாகவே கூறியிருந்தேன்.

எனது வழக்கு தொடர்பாக அவர் கூறியிருந்தார். இதுதொடர்பாக நான் கருத்து வெளியிடப்போவதில்லை. ஏனெனில், நான் இதுதொடர்பாக மேன்முறையீடு செய்துள்ளேன்.

88-89 களில் ஜே.வி.பியினர் கப்பம் பெற்றதும், தங்கங்களை கொள்ளையடித்ததும் அனைவருக்கும் தெரியும். இவர்களுக்கு வீடுகளுக்கு தீ வைக்கவும், கொலை செய்யவும் முடியுமாக இருக்கும்.

நீங்கள் ம்மியிடமிருந்து பணம் பெறவில்லை என்றால் நாம் அதனை ஏற்றுக் கொள்கிறோம்.

நீங்கள் தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோது, சபையில் இல்லாத காரணத்தினால்தான் மக்களுக்கு அந்த சந்தேகம் ஏற்பட்டது.

இதனை தான் ஊடகங்களும் இன்று குறிப்பிட்டுள்ளன. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# பாக்.உயர்ஸ்தானிகர் கொலை முயற்சி: 16 வருடத்தின் பின் மூவரும் விடுதலை

இலங்கைக்கான பாகிஸ்தானின் முன்னாள் உயர்ஸ்தானிகர் பசீர் அலி மொஹமட் கொலை முயற்சி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட விடுதலைப் புலிகளின் பிரதிவாதிகள் மூவரும் 16 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட்14ஆம்திகதிகொள்ளுப்பிட்டி பகுதியில் வாகனப்பேரணியாக சென்று கொண்டிருந்த பாகிஸ்தான் முன்னாள் உயர் ஸ்தானிகரை கொலை செய்ய முயற்சி செய்தனர் என அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக முதலாவது பிரதிவாதியாக யோகராஜா நிரோஜனும் இரண்டாம் பிரதிவாதியாக சுப்பிரமணியம்சுரேந்திரராஜாவும் மூன்றாம் பிரதிவாதியான கனகரெத்தினம் ஆதித்தன் ஆகிய மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்பதால் மூவரையும் விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேன் வீரமன் உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் இரண்டாம் மூன்றாம் பிரிவுகளின் கீழ் 25 குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# 16 வயதுக்கு உட்பட்ட 131 சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகினர்

## ஒக்ரோபர் மாதம் மட்டும் என்கிறது பொலிஸ் தரப்;பு

ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 16 வயதுக்குட்பட்ட 131 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த பிரதிப் பொலிஸ்மாஅதிபர்ரேணுகாஜயசுந்தர, அவர்களில் 10 பேர் தற்போது கர்ப்பமடைந்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

செப்ரெம்பர் மாதத்தில் 16 வயதுக்குட்பட்ட 168 சிறுமிகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர் எனவும் அவர்களில் 22 பேர் கர்ப்பம் தரித்துள்ளனர் எனவும் அவர் கூறினார். (05)

## பருவ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல பகுதிகளுக்கும் மழையற்ற வானிலை தொடங்குகின்றது என்று காலநிலை அவதானி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன்மேற்படிநிலைமையானது எதிர்வரும் திங்கட்கிழமை வரையில் தொடரவுள்ளதாக தெரிவித்துள்ள அவர் குறித்த தினம் முதல் இவ்வாண்டுக்கான வடகீழ் பருவத்தின் முதலாவது தாழமுக்கம் வங்காள விரிகுடாவில் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார். எனவேதிங்கட்கிழமை பிற்பகல் முதல் 18ஆம் திகதி சனிக்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது.

குறிப்பாக 14, 15, 16 நவம்பர் 2023 திகதிகளில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கன மழை முதல் மிகக் கனமழை வரை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இன்று முதல் 13ஆம் திகதி காலை வரையான காலப்பகுதியில் களை நாசினி தெளித்தல், உரம் இடுதல் போன்ற நடவடிக்கைகளைமேற்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## கிரிக்கெட் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

கிரிக்கெட் நிறுவனத்தினைக் கலைப்பது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் உள்ளன. அதேநேரம், இதுதொடர்பான விடயங்களைவிளையாட்டுத்துறை அமைச்சர் எதிர்வரும் நாட்களில் நீதிமன்றத்தில்முன்வைக்கவுள்ளார். அதன்பின்னர்நீதிமன்றம்தகுதியான தீர்ப்பினை வழங்கும்.

நாடாளுமன்றத்தில் ஆளும், எதிர்த்தரப்பினர் நீதிமன்றத்தின் தீர்மானம் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக, நீதிமன்றத்தின்தீர்மானம்தொடர்பில் விசனப்பட்டனர். எவ்வாறாக இருந்தாலும் நீதிமன்றமே நிர்வாக குழு கலைப்பது தொடர்பில் சரியான தீர்மானத்தினை எடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. அந்த தீர்மானம் எவ்வாறானது என்பது தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கான உரிமை எமக்கு இல்லை என்றார்.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகக்குழு கலைப்பு நவம்பர் 13 நீதிமன்றத்தினை நாடவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில்நேற்றையதினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் திங்கட்கிழமை மேல்முறையீட்டு நீதிமன்றத்தினை நாடுவதற்கு நான் தீர்மானித்துள்ளேன். உயர் நீதிமன்றத்தினை நாடுவதற்கும் தயாராக உள்ளேன்.

சட்டமாஅதிபரின்செயற்பாடுகள் தொடர்பில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே நான் தனிப்பட்ட சட்டத்தரணிகள் ஊடாக வழக்கை முன்னெடுக்க முயற்சிக்கிறேன்.

2018 ஆம் ஆண்டே கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகள் சம்பந்தமாக வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கைகள் எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டாலும் இதுவரையில் எவ்விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. கிரிக்கெட் பணம் சக்திவாய்ந்தஆயுதமாகமாறியுள்ளது என்றார்.

## நவம்பர் 13 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பைக்கோரிய அவர்கள், அது குறித்து ஆட்சியாளர்கள் விரைந்து முடிவை அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

போராட்டத்தின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அரச சேவை தொழிற்சங்க கூட்டமைப்பின் இணைப்பாளர் தம்மிக்க முனசிங்க, நவம்பர் 13 சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டம் மீது தீவிரமான கவனத்தினைக் கொண்டுள்ளோம்.

அதில் எமது கோரிக்கை நிறைவேற்றப்படவேண்டும். எமது வாழ்வாதாரத்துக்கான சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும். ஆகக்குறைந்தது 20 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்படவேண்டும். சம்பள அதிகரிப்பு குறைவாக இருந்தால் நிச்சயமாகப் போராட்டத்தில் குதிப்போம்.

தற்போதுபோன்றுபோராடிவிட்டு வீட்டுக்குச்சென்றுவிடுவோம்என்று ஆட்சியாளர்கள் கருதக்கூடாது. அதியுச்சமான போராட்டத்தினை முன்னெடுப்பதற்கு நாம் தயங்கப்போவதில்லை. அதுநவம்பர் 13இன்பின்னர்மிகத்தீவிரமடையும் என்றார்.

## 150 மில்லியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேமிப்பை பாதுகாக்க முடியும்.

இந்த திட்டம் இலங்கையின் நிதிக்கட்டமைப்பில் நம்பிக்கையை நிலைநிறுத்தும் எனவும், நாட்டை மீண்டும் சிறப்பாகக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்காற்றும் என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# கொக்குவில் நாமகள் வித்தியில் மாணவர் சந்தை நிகழ்வுகள்







யாழ்ப்பாணம் - கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாணவர்களால் வியாழக்கிழமை 'மாணவர் சந்தை' வெகு சிறப்பாக நடைபெற்றது. பாடசாலை அதிபரும் சமூக செயற்பாட்டாளருமான லயன் ஜெ.ரஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிமனையின் உதவி கல்வி பணிப்பாளர் ப.சுரேந்திரனும், சிறப்பு விருந்தினராக கிராம அலுவலரான திருமதி ம.சுரேஷ்கண்ணாவும் கலந்து கொண்டு மாணவ சந்தையை ஆரம்பித்து வைத்தனர்.(05)

# வடக்கு, கிழக்கில் சீனாவின் முதலீடுகளை அனுமதிக்கக்கூடாது என்கிறார் செல்வம்

தமது இலாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு செயற்படும் சீனாவின் எந்த முதலீட்டு நடவடிக்கைகளையும் வடக்கு கிழக்கில் அனுமதிக்கக்கூடாதென நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'இலங்கையிலே அபிவிருத்தி என்ற போர்வையிலே சீனாவால் வீதிகள் போடப்பட்டன. ஆனால் வட்டிவீதம் கூடிய நிலையிலேயே தன்னுடைய இலாபம் கருதியே இலங்கை அரசாங்கத்திற்கு சீன அரசாங்கம் இந்த வேலைகளை செய்து கொடுத்தது.

அதேபோல் போர்ட் சிட்டியும்



சீனா தனக்கான ஒரு பிராந்திய இடமாக போர்ட் சிட்டியை வைத்துக் கொண்டது.

அம்பாந்தோட்டை விமான நிலையம் அம்பாந்தோட்டை துறைமுகம் இவ்வாறு ஒட்டுமொத்த இலங்கையின் வருமானத்தின் முக்காவாசி பங்கை வட்டிவிகிதமாக கட்டுவதற்கான நிலைமையை சீனா உருவாக்கியுள்ளது.

அதனால் தான் இப்போது பொருளாதார ரீதியாக நாங்கள் மீள முடியாத நிலையில் இருக்கிறோம்.

இப்பொழுது சீனா மீண்டும் வடக்குக் கிழக்கிலே குறிப்பாக வடக்கை தன்னகத்தே கொண்டு வருவதற்கான நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுகின்றது.

எங்களுடைய பிரதேசத்தை மையமாகக்; கொண்டு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் முரண்பாடுகள் தோன்றுகின்ற போது எங்களுடைய பிரதேசம் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்படும்.

நாங்கள் இந்தியாவை பகைத்துக் கொண்டு அல்லது இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உள் முரண்பாடுகள் காரணமாக வடக்குக் கிழக்கிலே பாதிப்பு ஏற்படுகின்ற சூழலை அனுமதிக்க முடியாது. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# வீரர்கள் மத்தியில் எவ்வித பிரச்சினையும் கிடையாது

## மஹிந்த தேசப்பிரிய திட்டவட்டம்

கிரிக்கெட் அணிக்குள்ளும் வீரர்கள் மத்தியிலும் எந்தவித பிரச்சினையும் இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி வித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை கிரிக்கெட் அணி மீண்டும் எழுச்சி பெறும் என நான் நம்புகின்றேன். சரியான அடித்தளம் மற்றும் ஒற்றுமை என்ற தற்காலிக பிரச்சினை இருப்பதால் இலங்கை கிரிக்கெட்டே சரிவில் இருக்கின்றது எனக் கூறமுடியாது.

இந்த ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட்டில் இலங்கை அணி மோசமாக விளையாடியிருந்தாலும் கடந்த ஆண்டு ஆசியக் கிண்ணத்தை வென்றது. அத்தோடு இந்த ஆண்டு இடம்பெற்ற ஆசிய கிண்ண தொடரில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.



அணிக்குள்ளும் வீரர்கள் மத்தியிலும் எந்தவித பிரச்சினையும் கிடையாது பிரச்சினை இருக்கும் இடங்களை கண்டுகொண்டு அதனை சரிசெய்ய வேண்டும்.

நிச்சயமாக, அதற்கு சிறிது நேரம் எடுக்கும், எவ்வாறாயினும், எமது வீரர்களை இழிவாகப் பார்க்காமல், போட்டிகளின் முடிவைப் பொருட்படுத்தாமல் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# பேராதனை பல்கலை மாணவர் குழுக்களுக்கிடையில் மோதல்

## மூவர் படுகாயம்

இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் பல் மருத்துவ பீடங்களின் மாணவர்களுக்கு இடையில் வியாழக்கிழமை மாலை கைகலப்பு ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி படுகாயமடைந்த பல் மருத்துவபீட மாணவர்கள் மூவர் பேராதனை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# காணிகளை விற்க மறுப்போருக்கு மன்னாரில் கொலை அச்சுறுத்தல்

## மக்கள் கவலை

மன்னாரில் காணிகளை விற்பனை செய்ய மறுப்பவர்கள் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவை சேர்ந்த 'தைதானியம் சாண்ட்' நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 4000 துளைகளுக்கு மேல் இட்டு கனிய மணல் ஆய்வுகளை மேற்கொண்டு தற்போது மணல் அகழ்வுக்கான அனுமதியைக் கோரியுள்ளது.

இந்நிலையில் புதன்கிழமை இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இலங்கையில் சுமார் 18 திணைக்களங்களை சேர்ந்த அதிகாரிகள் மன்னார் பிரதேசெயலாளர் பிரிவில் உள்ள கொண்ணையன்குடியிருப்பு பகுதிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இந்நிலையில் குறித்த விடயத்தை அறிந்த அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு ஆய்வுகளுக்கு அனுமதி வழங்க மறுத்ததுடன் வீதி தடைகளையும் ஏற்படுத்தி மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க முடியாது என்று கோஷம் எழுப்பியிருந்தனர்.

இதனையடுத்து மக்களின் தொடர் எதிர்ப்பின் காரணமாக வருகை தந்த குழுவினர் சம்பவ இடத்தை விட்டு வெளியேறிய துடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

இதே வேளை வன்னியை சேர்ந்த முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஒருவர் குறித்த மணல் அகழ்வு மேற்கொள்ள உள்ள இலங்கைக்கான பிரதிநிதியிடம் பாரிய அளவு லஞ்சம் கோரினார் எனவும், அதே நேரம் குறித்த அமைச்சரின் உறவினரான முஹமட் அம்மானி எனப்படும் நபர் ஒருவர் மக்களின் காணிகளை அடாத்தாக பிடித்து குறித்த நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளார் எனவும் மக்கள் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தனர்.

அத்துடன் காணி விற்பனை செய்ய மறுப்பவர்களை 'வெள்ளை வானில் கடத்துவோம், கொலை செய்வோம்' என அச்சுறுத்தி காணி கொள்ளையில் ஈடுபட்டு வருவதாகவும் இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றனர் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அகழ்வுக்கான அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதோடு, முன்னாள் அமைச்சரின் பின் புலத்தில் தற்போது மணல் அகழ்வுக்கான உயர்மட்ட அனுமதிகளை பெறுவதற்கான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன. (05)





# கசிப்பு உற்பத்திசெய்யும் நிலையத்தை முற்றுகையிட்ட கிளிநொச்சி மக்கள்

கிளிநொச்சி, பெரிய குளம் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நேற்று (வெள்ளிக்கிழமை) கிளிநொச்சி பொலிஸார், மாதர் சங்கம் மற்றும் பொதுமக்கள் இணைந்து முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது அப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பரல்கள் கோடாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# சீரற்ற காலநிலையால் யாழில் 28 பேர் பாதிப்பு

யாழில் கடந்த சில நாள்களாக நிலவி வரும் சீரற்ற காலநிலையினால் 07 வீடுகள் பகுதிகளவில் சேதமடைந்துள்ளதுடன், 07 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொலிகண்டி கிழக்கு பகுதியிலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, இவ்வாண்டின் தொடக்கத்தில் இருந்து வியாழக்கிழமை வரையிலான காலப்பகுதியில் 836.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், வியாழன் மாத்திரம் 8.11 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.- இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# அரசியல் தீர்வு குறித்த விடயத்தில் ஆஸியின் மத்தியஸ்தம் வேண்டும்

## இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டு

ஆஸ்திரேலிய அரசானது எமக்கான அரசியல் தீர்வு விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த இரா.சாணக்கியன் –

குறித்த சந்திப்பில் போது சமகால அரசியல் தொடர்பாகவும் குறிப்பாக மயிலத்தமடு மாதவனை பகுதிகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான முழுவிவரங்களை அறியும் முகமாகவும் அதற்கான தீர்வுகளை பற்றியதாக இருந்தது.

மற்றும் எமது கட்சியின் எதிர்கால மாநாடு தொடர்பாகவும் இளைஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

ஆஸ்திரேலியாவும் எமது நாட்டைப் போல் கூட்டாச்சி அரசியல் அமைப்பைக் கொண்ட நாடாகும் மாநிலங்கள் போல் இங்கு மாகாணமாக காணப்படுகின்றது.

அங்கு மற்றைய நாடுகளைப் போல் அல்லாது இலங்கையை சேர்ந்த புலம்பெயர்ந்த சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் என பலர் வாழ்ந்து வருகின்றார்கள்.

அதன் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் ஆஸ்திரேலியாவை நடுநிலைமை வகிக்கும் நாடு என்ற வகையில் ஏற்றுக்கொள்ளும் என்ற ரீதியில் ஆஸ்திரேலிய அரசானது எமக்கான அரசியல் தீர்வு விடையத்தில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (05)



# கிரிக்கெட் அணி வீரர்களுக்கு பணத்திலேயே மிக அக்கறை

## சரத் வீரசேகர குற்றச்சாட்டு

கிரிக்கெட் அணி வீரர்களுக்கு பணத்தில் மீதுதான் அக்கறை உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிரிக்கெட் அணி வீரர்களுக்கு தாய் நாடு அக்கறை உள்ளதா அல்லது அவர்களுக்கு வெறும் பணத்தில் மீதுதான் அக்கறை உள்ளதா எனும் சந்தேகம் இன்று மக்களிடத்தில் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், அமைச்சர் ரொான் ரணசிங்க உலகக் கிண்ணத் தொடர் இருப்பதால், எல்.பி.எல். போட்டிகளில் விளையாட வேண்டாம் என கிரிக்கெட் அணி வீரர்களுக்கு அறிவித்திருந்தார்.

ஆனால், பணத்திற்காக சில வீரர்கள் எல்.பி.எல். போட்டியில் விளையாடினார்கள். இவ்வாறு விளையாடிய சிறந்த வீரர்களில் ஐவர் காயமடைந்தனர்.



இதனால், உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாட முடியாத நிலைமை இவர்களுக்கு ஏற்பட்டது.

தனது நாட்டுக்காக அன்றி பணத்திற்காக இவர்கள் எல்.பி.எல்.இல் விளையாடினார்கள்.

இதனால்தான், இந்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. – என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# ஜே.வி.பி. பணம் பெற்றதை நிரூபித்துக் காட்டுங்கள்

## அநுர சவால்

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் ம்மி சில்வாவிடமிருந்து ஜே.வி.பி. பணம் பெற்றுக் கொண்டுள்ளதாக கூறப்படுவதை முடிந்தால் நிரூபித்துக் காண்பிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்கசவால்விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - கிரிக்கெட் சபையின்தலைவர்ஷம்மிசில்வா ஜே.வி.பிக்கு நிதிவழங்கியுள்ளார் என பிரசன்ன ரணதுங்க ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார்.

பிரசன்ன ரணதுங்க யார்? உயர்நீதிமன்றில் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள். கப்பம் பெறும் நபர்தான் இவர்.

அண்மையில் இடம்பெற்ற வழங்கொன்றில் கப்பம் கோரிய குற்றத்திற்காக 20 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

2 அரைக்கோடி தண்டப்பணம் செலுத்த வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. 4 வருட சீரப் பிணையில்தான் பிரசன்ன ரணதுங்க உள்ளார்.

இந்த நிலையில், ம்மி சில்வாவின் பணம் எமக்கு வந்ததாக இவர் கூறுகிறார். நாம் அவரைக் கண்டதுகூட கிடையாது.

பிரசன்ன ரணதுங்க இது தொடர்பாக நாடாளுமன்றில் உரிய விளக்கத்தை அளிக்க வேண்டும். இது தொடர்பாக விசாரணை நடத்துங்கள். வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவரால் நாடாளுமன்றுக்கு தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, நாம் இருக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டாலும் வாக்கெடுப்பு இடம்பெறாது என்பது தெரியும். இது ஏகமனதாக கொண்டுவரப்பட்ட தீர்மானமாகும். எனவே, இல்லாத வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வேண்டிய தேவையில்லை என்றே நாம் சபையில் இருக்கவில்லை. ஷம்மி சில்வாவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற தேவை எமக்கு இருக்கவில்லை. விளையாட்டுத் துறை அமைச்சரிடம் நான் தனிப்பட்ட ரீதியாகவே கிரிக்கெட் சபைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருந்தோம். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(05)

# கிரிக்கெட்டில் அரசியல்வாதிகளின் தலையீட்டை தடுக்க சட்டம் தேவை

## இரா. சாணக்கியன் வலியுறுத்து

இலங்கை கிரிக்கெட்டின் செயற்பாடுகளில் அரசியல்வாதிகள் தலையிடவே முடியாதவாறு சட்டங்கள் இயற்றப்படுமானால் அதற்கு ஆதரவளிப்பதற்குத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை கிரிக்கெட்டின் நிலைமையும் நாட்டின் நிலைமையும் ஒன்றாகத் தான் இன்று இருக்கிறது.

விளையாட்டுத்துறை அமைச்சருக்கு இடைக்கால குழுவொன்றைதற்போது நியமிக்க முடியுமாக இருந்தால், ஏன் இதற்கு முன்பே இடைக்கால குழுவை அமைச்சர் நியமிக்கவில்லை?

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளில் கிரிக்கெட்டில், அரசியல்வாதிகள் தலையிடவே முடியாது.

அப்படியானதொரு சட்டம் கொண்டுவரப்படுமானால், நாமும் நிச்சயமாக ஆதரவு வழங்குவோம்.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தால் எந்தவொரு மாற்றமும் நிகழ்ந்துவிடாது என சாணக்கியன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# கடலட்டை பண்ணைக்கு கிராஞ்சியில் கிராக்கி

யாழ்.கிராஞ்சி பகுதியில் கடலட்டை பண்ணை அமைக்க பலரும் விண்ணப்பித்துள்ளனர் என கிராஞ்சி ஸ்ரீ முருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

கடலட்டை பண்ணைக்கு பலரும் விண்ணப்பித்துள்ளனர். ஆகவே பாரம்பரிய கடற்றொழில் செய்பவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அவர்களுக்கும் கடலட்டை பண்ணையை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் கிராஞ்சி பகுதியில் கடலட்டை பண்ணை வழங்க ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களில் சிலர் தமது தவறை உணர்ந்து கடலட்டை பண்ணைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

ஆனால் கடலட்டை பண்ணை போட்டவர்களுக்கு லட்சக்கணக்கான பணம் இலாபமாக கிடைத்துள்ளது. மேலும் பலர் கடலட்டை பண்ணைக்கு விண்ணப்பித்துள்ளனர். பாரம்பரிய கடற்றொழில் செய்பவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அவர்களுக்கும் கடலட்டை பண்ணையை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் வந்து தொழில் செய்வதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனால் எமது வளங்கள் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் எமது வளங்களை அள்ளிச் செல்கின்றனர்.

எமது பகுதி மீனவர்களும் இந்திய கடற்பகுதிக்குள் சென்று கடற்றொழிலில் ஈடுபடுவதை ஏற்க முடியாது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இதனையே சொல்கிறார். - இவ்வாறு மகேந்திரன் தெரிவித்துள்ளார். (05)

# மட்டக்களப்பில் பஸ் தீ வைத்து எரிப்பு

மட்டக்களப்பு,ஆரையம்பதி பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்று வியாழக்கிழமை இரவு மர்ம நபர்கள் சிலரால் தீ வைத்துளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு -பொத்துவில் பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்ஸே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. சம்பவ தினத்தன்று பஸ்ஸை ஆரையம்பதி பிரதான வீதியில் நிறுத்தி வைத்துவிட்டு அதன் உரிமையாளர் தனது சொந்த இடமான கொக்கட்டிச்சோலைக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 3:30 மணியளவில் குறித்த பஸ் தீப்பற்றி எரிவதாக காத்தான்குடி பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இந்நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் தீயணைப்புப் படையினரது உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் பஸ் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# வைத்தியசாலைக்கு சென்றவர் வீட்டில் திருடர்கள் கைவரிசை

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

வைத்தியசாலைக்குச் சென்ற நபரது வீட்டில் உள்ள இருந்த தொலைக்காட்சி பெட்டி உள்ளிட்ட பல பெறுமதியான பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் யாழில் இடம்பெற்றுள்ளது.

பளை பகுதியிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று வீட்டின் உரிமையாளர் வீட்டை பூட்டிவிட்டு யாழ் போதனா வைத்திய சாலைக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் அவர் வீட்டுக்கு திரும்பிய வேளை வீட்டின் கதவு திறந்திருந்துள்ளதோடு, வீட்டில் இருந்த தொலைக்காட்சி பெட்டி, மின் மோட்டார் உள்ளிட்ட பல பெறுமதியான பொருள்கள் திருட்டு போயுள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# கொடுப்பனவு பெறச் சென்ற பெண் யாழில் பரிதாபச் சாவு

யாழில் வியாழக்;கிழமை நலன்புரி கொடுப்பனவை பெற சென்ற வயது முதிர்ந்த பெண்ணொருவர் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை , கற்கோவளம் பகுதியை சேர்ந்த அமிர்தலிங்கம் கமலேஸ்வரி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.11.2023இல் வெளியிடப்பெற்றது.